**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**
**Special Sessions Case No.21/2023**

Prosecution Witness : **P.W32**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : **ரவிச்சந்திரன்** | **Father's Name** | : |
| **Village** | : | **Taluku** | : |
| **Caste** | : | **Calling** | : |
| **Religion** | : | **Age** | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 23rd day of January 2026.

**(7ம் எதிரி மணிகண்டன் (எ) கூல்மணி ஆஜர்படுத்தப்பட்டார் மற்றும் 9ம் எதிரி உதயநிதி (எ) சூர்யா ஆஜராகியுள்ளார். 9ம் எதிரி உதயநிதி (எ) சூர்யா ஆஜரில்லை. அவர் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியுள்ளார். குவிமுச. 317 தாக்கல் செய்து அடையாளத்தை பற்றி ஆட்சேபனை செய்யக்கூடாது என நிபந்தனையுடன் மனு அனுமதிக்கப்ட்டுள்ளது.)**

**முதல் விசாரணை**

நான் தற்போது சேலம் மாநகரத்தில் சிறப்பு நுண்ணறிவு பிரிவில் காவல் உதவி ஆணையராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 13.03.2021 ஆம் தேதி கரூர் ஊரக உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளராக பணியில் இருந்த போது கரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.C.No.1/SJ& HR/SP-Karur/2021 தேதி 12.03.2021 ன் உத்திரவுபடி வேலாயுதம்பாளையம்

காவல் நிலைய குற்ற எண்.778/2020 U/s.147, 148, 302 இ.த.ச. @ 147, 148, 120(b), 302 இ.த.ச. r/w 3(1)(x), 3(1)(x1), 3(2)(v) of SC & ST (POA) Amendment Act 2016 ன்படி மேற்படி வழக்குக்கோப்பை வேலாயுதம்பாளையம் காவல் நிலைய, காவல் ஆய்வாளர் சிதம்பரபாரதி என்பவரிடம் கடந்த 13.03.2021 ஆம் தேதி வழக்குக்கோப்பை பெற்று தொடர் விசாரணை மேற்கொண்டேன். எனக்கு காவல் துறை கண்காணிப்பாளர் வழங்கிய ஆவணம் இதுதான். **அது அ.த.சா.ஆ.69 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி வழக்குக்கோப்பை படித்துப் பார்த்ததில் இவ்வழக்கின் எதிரிகள் 9 நபர்களை காவல்படுத்தியும், அவர்களிடமிருந்து வழக்குச்சொத்துக்களை கைப்பற்றியும், மேற்படி வழக்குச்சொத்துக்கள் அனைத்தும் நீதிமன்றத்தில் ஒப்படைத்து R.P.No. பெற்றும், மேலும் சம்பவ இடத்தில் கைப்பற்றிய வழக்குச் சொத்துக்களையும், பிரேத பரிசோதனையின்போது கைப்பற்றிய உடமைகளையும், பிரேத பரிசோதனையின் போது சேகரிக்கப்பட்ட உடல் உள்ளுருப்புகளையும், ராசயன பகுப்பாய்விற்கு அனுப்பப்பட்டிருந்தது. மேலும், இவ்வழக்கில் கொலையுண்டு இறந்துபோனவருக்கும் மற்றும் இவ்வழக்கின் எதிரிகளுக்கும் ஜாதி சான்று கேட்டு சம்மந்தப்பட்ட வட்டாட்சியர்களுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுக்கப்பட்டிருந்தது. அதன் பிறகு, கடந்த 13.03.2021 ஆம் தேதி இவ்வழக்கின் சம்பவயிடமான வேலாயுதம்பாளையம், காவல் நிலைய சரகம், பைபாஸ் ரோட்டில் உள்ள மூலிமங்கலம் பிரிவு ரோடு அருகே சென்று 91 கபே காபி கடை அருகே சென்று சம்பவயிடத்தை பார்வையிட்டதில் ஏற்கனவே காவல் ஆய்வாளர் சம்பவயிடத்தில் பார்வை

மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்திருந்தார். அது சரியாக இருந்ததால் நான் தனியாக மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை. **அந்த மாதிரி வரைபடம் ஏற்கனவே அ.த.சா.ஆ.52 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த பார்வை மகஜர் ஏற்கனவே அ.த.சா.ஆ.18 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.** அதன் பிறகு, அன்று வரவழைக்கப்பட்ட சாட்சிகள் ரமேஷ், சுகுணா, காளியம்மாள், மாரியாயி, மோகன்ராஜ், ராமர், சிவக்குமார், திருமாவளவன், பிரகாஷ், ஜெயந்தி, அரசகுமார், முருகானந்தம், வான்மதி, விஜயனாந்தன் ஆகியோர்களை விசாரணை செய்ததில் ஏற்கனவே காவல் ஆய்வாளரிடம் வாக்குமூலம் கொடுத்ததுபோல் சரியாக இருந்ததால் நான் தனியாக வாக்குமூலம் தயார் செய்யவில்லை. அதன் பிறகு கடந்த 15.03.2021 ஆம் தேதி புகளூர் வட்டாட்சியர் அலுவலகம் சென்று இவ்வழக்கின் ஆஜர் எதிரிகள் கலையரசன், கோகுல்நாத், ஷேக்தாவூத், கிரி (எ) கிரிதரன் ஆகியோர்களுக்கு துணை வட்டாட்சியர் ஜெகமணி என்பவர் வழங்கிய ஜாதி சான்றுகளை அவரிடம் காண்பித்து அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **ஆஜர் எதிரிகள் கலையரசனின் ஜாதி சான்றிதழ் ஏற்கனவே அ.த.சா.ஆ.61 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஆஜர் எதிரிகள் கோகுல்நாத் ஜாதி சான்றிதழ் ஏற்கனவே அ.த.சா.ஆ.64 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஆஜர் எதிரிகள் ஷேக்தாவூத் ஜாதி சான்றிதழ் ஏற்கனவே அ.த.சா.ஆ.65 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஆஜர் எதிரிகள் கிரி (எ) கிரிதரன் ஜாதி சான்றிதழ் ஏற்கனவே அ.த.சா.ஆ.66 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.** அதன் பிறகு கடந்த 16.03.2021 ஆம் தேதி முன்னால் புகளூர் வட்டாட்சியர் திரு.வேலுச்சாமி

அவர்களை எமது அலுவலகத்திற்கு வரவழைத்து இவ்வழக்கின் எதிரிகளான பிரபு மகன் பிரசாந்த், முனியன் மகன் பிரசாத் ஆகியோர்களுக்கு அவர் வழங்கிய ஜாதி சான்றிதழை அவரிடம் காண்பித்து அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன் பிறகு அன்றே இவ்வழக்கில் கொலையுண்டு இறந்துபோன ரஞ்சித்குமார் என்பவருக்கு ஜாதி சான்று வழங்கிய திருச்சி மேற்கு வட்டாட்சியர், திரு.ரமேஷ் என்பவரிடம் அவரது செல்போனுக்கு தொடர்பு கொண்டு மேற்படி ஜாதிசான்றிதழ் சம்மந்தமாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **ரஞ்சித்குமார் என்பரின் ஜாதிசான்றிதழ் ஏற்கனவே அ.த.சா.ஆ.47 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.** அதன் பிறகு கடந்த 17.03.2021 ஆம் தேதி கரூர் அரசு மருத்துவகல்லூாி மற்றும் மருத்துவமனைக்கு சென்று இவ்வழக்கில் கொலையுண்டு இறந்துபோன ரஞ்சித்குமாரின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் திரு.மணிவாசகம் அவர்களை சந்தித்து அவர்களிடம் பிரேத பரிசோதனை சான்று, ராசயன பகுப்பாய்வு சான்றிதழ், இறுதி கருத்துரை சான்றிதழ் பெற்று அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **பிரேத பரிசோதனை சான்று ஏற்கனவே, அ.த.சா.ஆ.41 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இறுதி கருத்துரை ஏற்கனவே அ.த.சா.ஆ.42 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.** அதன் பிறகு கடந்த 09.04.2021 ஆம் தேதி இவ்வழக்கில் எதிரிகள் சம்பவத்தின்போது பயன்படுத்திய TN–48–J–1796 என்ற பதிவெண் உள்ள Hero Honda Splendor என்ற இருசக்கர வாகனத்தின் உரிமையாளர் விபரம் கேட்டு வட்டார போக்குவரத்து அலுவலர் ஸ்ரீரங்கம் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம்

கொடுத்து அன்றே மேற்படி வாகனத்தின் உரிமையாளர் அருள் என்ற விபரத்தை பெற்றேன். அதன் பிறகு அன்றே இவ்வழக்கில் எதிரிகள் பயன்படுத்திய TN-47-AQ-8502 என்ற பதிவெண் கொண்ட பஜாஜ் பிளாட்டினம் மற்றும் TN-47-AT-5008 என்ற பதிவெண் கொண்ட TVS Star Sports ஆகிய வாகனங்களின் உரிமையாளர்களின் விபரம் கேட்டு கரூர் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலர் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுக்கப்பட்டது. அதன் விபரங்களை பெற்றேன். **TN-47-AQ-8502 என்ற பதிவெண் கொண்ட பஜாஜ் பிளாட்டினவின் புகைப்படம் ஏற்கனவே அ.த.சா.ஆ.30 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. TN-47-AQ-8502 என்ற பதிவெண் கொண்ட <u>வாகனத்திற்குரிய பதிவு சான்றிதழ் இதுதான். அது அ.த.சா.ஆ.70 ஆக குறியீடு செய்யப்படுகிறது.</u> TN-47-AT-5008 என்ற பதிவெண் கொண்ட TVS Star Sports வாகனத்தின் புகைப்படம் ஏற்கனவே அ.த.சா.ஆ.27 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. TN-47-AT-5008 என்ற பதிவெண் கொண்ட TVS Star Sports வாகனத்தின் பதிவு சான்றிதழ் இதுதான். அது அ.த.சா.ஆ.71 ஆக குறியீடு செய்யப்படுகிறது. TN-48-J-1796 என்ற பதிவெண் உள்ள Hero Honda Splendor வாகனத்தின் புகைப்படம் ஏற்கனவே அ.த.சா.ஆ.33 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. TN-48-J-1796 என்ற பதிவெண் உள்ள Hero Honda Splendor வாகனத்தின் வாகனத்தின் பதிவு சான்றிதழ் இதுதான். அது அ.த.சா.ஆ.72 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அதன் பிறகு கடந்த 10.04.2021 ஆம் தேதி சாட்சிகள் நவீன்குமார், அருள், கண்ணபிரான், ஜெயிலாபுதீன், சதீஸ்குமார், மாயவன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன் பிறகு

கடந்த 12.04.2021 ஆம் தேதி இவ்வழக்கின் எதிரிகள் சம்பவத்தின்போது பயன்படுத்திய TN-47-AQ-8502 என்ற வாகனத்தின் உரிமையாளர் சுரேஷ், வேலாயுதம்பாளையம் என்றும், மற்றும் TN-47-AT-5008 என்ற வாகனத்தின் உரிமையாளர் நாகராஜன், பொன்னியாகவுண்டனுர் என்றும் கரூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இருந்து அதன் விபரங்களை சான்றிதழுடன் பெற்றுக்கொண்டேன். அதன் பிறகு கடந்த 13.04.2021 ஆம் தேதி சாட்சிகள் கோபாலகிருஷ்ணன், சூர்யா, நவீன், சுரேஷ் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன் பிறகு கடந்த 15.04.2021 ஆம் தேதி சாட்சிகள் ஜெயப்பிரகாஷ், சகுந்தலாதேவி, ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன் பிறகு கடந்த 17.04.2021 ஆம் தேதி இவ்வழக்கில் எதிரி உதயநிதி (எ) சூர்யா என்பவர் சம்பவத்தின்போது பயன்படுத்திய சூரிகத்தியை கரூர் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் ஒப்படைத்து RP.No.6/2021 என பெறப்பட்டது. அந்த சூரியை என்னால் அடையாளம் காட்ட முடியும். **அந்த சூரிகத்தி ஏற்கனவே அ.சா.பொ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.** அதன் பிறகு கடந்த 19.04.2021 ஆம் தேதி இவ்வழக்கின் சம்பவத்தின்போது கைப்பற்றப்பட்ட ரத்த மாதிரிகளை பகுப்பாய்வு செய்து அறிக்கை வழங்கிய திருச்சி மண்டல தடய அறிவியல் அதிகாரி சிவசங்கரி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன் பிறகு கடந்த 20.04.2021 ஆம் தேதி சாட்சி அப்பு (எ) முகமது அபு கிராயரா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன் பிறகு கடந்த 21.04.2021 ஆம் தேதி இவ்வழக்கில் மதுரையை சேர்ந்த எதிரிகள்

ஆஜர் எதிரி கூல்மணி (எ) மணிகண்டன் (நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள கூல்மணியை சாட்சி சரியாக அடையாளம் காண்பித்தார்.) உதயநிதி (எ) சூர்யா (நீதிமன்றத்தல் ஆஜராகவில்லை.) மற்றும் சீனிவாசன் ஆகியோர்களுக்கு ஜாதி சான்றுகள் வழங்கிய மதுரை தெற்கு வட்டாட்சியர் அணிஷ் சத்தா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **கூல்மணி (எ) மணிகண்டன், உதயநிதி (எ) சூர்யா, மற்றும் சீனிவாசன் ஆகியோர்களுக்கு ஜாதி சான்றுகள் ஏற்கனவே அ.த.சா.ஆ.67 ஆக மூவருக்கும் சேர்ந்து குறியீடு செய்யப்பட்டுள்ளது.** அதன் பிறகு கடந்த 24.04.2021 ஆம் தேதி சாட்சி விஜயனாந்தன் என்பவரை மீண்டும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன் பிறகு கடந்த 29.04.2021 ஆம் தேதி இவ்வழக்கின் சம்பவம் குறித்து CCTV கேமராவில் பதிவு நிகழ்வுகளை மூன்று பென் டிரைவில் பதிவு செய்து பின்பு பென் டிரைவில் இருந்து CD ல் காப்பி செய்து கொடுத்த சென்னை தடயஅறிவியல் ஆய்வாளர் விசாலாட்சியை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **நான் பதிவேற்றம் செய்த மூன்று பென் டிரைவ் ஏற்கனவே நீ.ம.சா.ஆ.6, நீ.ம.சா.ஆ.7, நீ.ம.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மூன்று CD ஏற்கனவே நீ.ம.சா.ஆ.3, நீ.ம.சா.ஆ.4, நீ.ம.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவை மூன்றிற்குமான 65 சான்றிதழ் ஏற்கனவே அ.த.சா.ஆ.58, அ.சா.ஆ.59, அ.சா.ஆ.60 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.** மேற்படி CD ல் பதிவேற்றம் செய்து கொடுத்த சென்னை தடய அறிவியல் துறை துணை இயக்குநர் விசாலாட்சி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன் பிறகு கடந்த 12.05.2021 ஆம் தேதி இவ்வழக்கின்

விசாரணை முடித்து திருச்சி மண்டல துணை இயக்குநர் அவர்களிடம் மாதிரி குற்றப்பத்திரிக்கை பெற்று அதனடிப்படையில் சட்டப்பிரிவு 147, 148, 120(b), 302 இ.த.ச. r/w 3(1)(x), 3(1)(xi), 3(2)(v) SC&ST(POA) Amendment Act 2015 ல் இருந்து 147, 148, 120(b), 302 இ.த.ச. உ/இ 149 இ.த.ச. மற்றும் 3(2)(v) SC&ST (POA) Amendment Act 2015 ன்படி சட்டப்பிரிவினை மாற்றம் செய்து அதன் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். வழக்கு சொத்துக்களை பகுப்பாய்வு செய்யப்பட்டு பின்வரும் ஆய்வறிக்கைகள் நீதிமன்றத்தால் பெறப்பட்டுள்ளது. அவற்றுள் <u>12.03.2021 ஆம் தேதியிட்ட ரத்தம் மாதிரி அறிக்கை இதுதான் அது அ.த.சா.ஆ.73 ஆக குறியீடு செய்யப்படுகிறது.</u> <u>19.02.2021 ஆம் தேதியிட்ட ரத்தம் மாதிரி அறிக்கை இதுதான் அது அ.த.சா.ஆ.74 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 22.09.2022 ஆம் தேதியிட்ட ரத்தம் மாதிரி அறிக்கை இதுதான் அது அ.த.சா.ஆ.75 ஆக குறியீடு செய்யப்படுகிறது.</u>

சான்றாவணம் 33 பென் டிரைவ் நீதிமன்ற கணிணியில் 3_05_R_17122020042304PM-2 வீடியோ Play செய்யப்பட்டு 00.47 விநாடியில் Pause செய்யப்பட்டு அதில் மஞ்சள் நிற முழுக்கை சட்டை , அரைக்கால் கருப்பு டிராயர் அணிந்து கொண்டு முன்னால் ஓடுபவர் இவ்வழக்கில் கொலையுண்டு இறந்துபோன ரஞ்சித்குமார் ஓடும் காட்சி என்று சாட்சி அடையாளம் காண்பித்தார். 3_05_R_17122020042304PM-2 வீடியோ Play செய்யப்பட்டு 00.50 விநாடியில் Pause செய்யப்பட்டு வெள்ளை நிற முழுக்கை சட்டை, கருப்பு கலர் ஜீன்ஸ் பேண்ட் அணிந்து

கொண்டு ரஞ்சித்குமாரை துரத்திக்கொண்டு செல்பவர் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள கூல்மணி என்கிற மணிகண்டன் ஆவார். 3_05_R_17122020042304PM-2 வீடியோ Play செய்யப்பட்டு 00.50 விநாடியில் Pause நிறுத்தப்பட்டு கூல்மணிக்கு பின்னால் மஞ்சள் கலர் டீசர்ட் பனியன், அரைக்கால் டிராயர் அணிந்துகொண்டு வலது கையில் வீச்சருவாளை எடுத்துக்கொண்டு ஓடி வருபவர் சீனிவாசன் ஆவார். 3_05_R_17122020042304PM-2 வீடியோ Play செய்யப்பட்டு 00.51 விநாடியில் Pause நிறுத்தப்பட்டு சீனிவாசனுக்கு பின்னால் சூர்யா என்பவர் பிரவுன் கலர் முழுக்கை சட்டையும், அரைக்கால் டிராயரும் அணிந்து கொண்டு வலது கையில் வால்கத்தியுடன் ஓடிவருகிறார். அப்போது சூர்யா இரண்டு கால்களிலும் அணிந்திருந்த காலணிகளை ஓடும்போது கழண்டு விழுகிறது. 3_05_R_17122020042304PM-2 வீடியோ Play செய்யப்பட்டு 00.52 விநாடியில் Pause நிறுத்தப்பட்டு சூர்யாவிற்கு பின்னால் பிரசாத் என்பவர் மஞ்சள் நிற முக்கால் பேண்ட், வெள்ளை கலர் டீசர்ட் பனியன் அணிந்து கொண்டு வருகிறார். 3_05_R_17122020042304PM-2 வீடியோ Play செய்யப்பட்டு 00.54 விநாடியில் Pause நிறுத்தப்பட்டு பிரசாத்திற்கு பின்னால் நீலநிற புளு கலர் முழுக்கை சட்டையும், கருப்பு கலர் ஜீன்ஸ் பேண்ட்டும் அணிந்து ஓடி வருபவர் ஷேக்தாவுத் ஆவார். 3_05_R_17122020042304PM-2 வீடியோ Play செய்யப்பட்டு 00.56 விநாடியில் Pause நிறுத்தப்பட்டு ஷேக்தாவுத்திற்கு பின்னால் கோடுபோட்ட புளு கலர் கலந்த டீசர்ட் பனியன் மற்றும் கருப்பு கலர் ஜீன்ஸ் பேண்ட் அணிந்து கொண்டு ஓடி வரும் நபர் பிரசாந்த் ஆவார்.

3_05_R_17122020042304PM-2 வீடியோ Play செய்யப்பட்டு 00.56 விநாடியில் Pause நிறுத்தப்பட்டு பிரசாந்திற்கு பின்னால் வெள்ளை கலர் முழுக்கை சட்டையும் கருப்பு கலர் வேட்டியும் அணிந்து கொண்டு ஓடி வருபவர் கலையரசன் ஆவார். கலையரசனுக்கு பின்னால் பிரவுன் கலர் முழுக்கை சட்டையும், லுங்கி அணிந்து கொண்டும், தலையில் தொப்பி அணிந்து கார் அருகில் ஓடிவந்து கோகுல்நாத் என்பவர் நிற்கிறார். நீ.ம.சா.ஆ.7 பென்டிரைவில் உள்ள 3_01_R_17122020042304PM வீடியோ Play செய்யப்பட்டு 00.47 விநாடியில் Pause நிறுத்தப்பட்டு இவ்வழக்கில் கொலையுண்டு இறந்துபோன ரஞ்சித்குமார் வந்த இருசக்கர வாகனத்தில் உடன் உட்கார்ந்து வந்த சிகப்பு கலர் முழுக்கை சட்டை கருப்பு கலர் ஜீன்ஸ் பேண்ட் அணிந்த பிரகாஷ் என்பவர் உள்ளார். A02_20201217165200 வீடியோவில் காட்டப்படும் வெங்கமேடு என்எஸ்கே நகரில் உள்ள ஏ1 பெட்ரோல் பங்கிற்கும் சம்பவ இடத்திற்கும் சுமார் 12 கிலோமீட்டர் தொலைவு இருக்கும். A02_20201217165200 வீடியோ Play செய்யப்பட்டு 01.32 விநாடியில் Pause நிறுத்தப்பட்டு TN-48-J-1796 என்ற பதிவெண் கொண்ட Heor Honda Splendor Plus என்ற இருசக்கர வாகனத்தை ஆஜர்எதிரி கூல்மணி என்கிற மணிகண்டன் ஓட்டிக்கொண்டும் மேற்படி வாகனத்தின் பின்னால் பிரசாந்த் என்பவர் உட்கார்ந்து வருகிறார். A02_20201217165200 வீடியோ Play செய்யப்பட்டு 01.38 விநாடியில் Pause நிறுத்தப்பட்டு அதற்கு பின்னால் TN-47-AT-5008 என்ற பதிவெண் கொண்ட TVS Star Sport என்ற இருசக்கர வானத்தை சீனிவாசன் என்பவர் ஓட்டிக்கொண்டும்

அதன்பின்னால் சூர்யா என்பவர் உட்கார்ந்துகொண்டும் வருகிறார். A02_20201217165200 வீடியோ Play செய்யப்பட்டு 01.41 விநாடியில் Pause நிறுத்தப்பட்டு அதற்கு பின்னால் TN-47-AQ-8502 என்ற பதிவு எண் கொண்ட Bajaj Platina என்ற இருசக்கர வாகனத்தை கலையரசன் என்பவர் ஓட்டிக்கொண்டு வருகிறார். A02_20201217165200 வீடியோ Play செய்யப்பட்டு 02.10 விநாடியில் Pause செய்து நிறுத்தப்பட்டு அதற்கு பின்னால் பிரசாத், ஷேக்தாவுத், கோகுல்நாத் ஆகியோர்கள் ரோட்டிலிருந்து நடந்து பெட்ரோல் பங்கிற்கு உள்ளே வருகிறார்கள். அதன் பிறகு இவ்வழக்கில் விசாரணை முற்றிலும் முடித்து கடந்த 12.05.2021ம் தேதி எதிரிகள் 1.கலையரசன், 2.பிரசாந்த், 3.பிரசாத், 4.ஷேக்தாவூத், 5.கோகுல்நாத், 6.கிரி (எ) கிரிதர், 7.மணிகண்டன் (எ) கூல்மணி, 8.சீனிவாசன், 9.உதயநிதி (எ) சூர்யா ஆகியோர்கள் மீது சட்டப்பிரிவுகள் 147, 148, 120(b), 302 இ.த.ச. உ/இ 149 இத.ச. மற்றும் பிரிவுகள் 3(2)(v) SC&ST(POA) Amendment Act 2018-ன் படி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>7, 9 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.01.23 18:17:34 +0530

மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.